REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 35630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 12உ திங்கள் (25–4–55) ★ ★ வெளியீடு: சித்திரை 13உ செவ்வாய் (26—4—55) [இதழ் 268

## பஞ்சாப் மாநிலக் கிளர்ச்சி: தடை உத்தரவு மீறப்படும்

'பஞ்சாப் மொழி பேசும் மாநிலத்தை பரிமாக்க நாட்களுக்குள் அமைக்க வேண்டும்,' என்ற கோஷங்கள் எழுப்புவது கூடாது என்று சர்க்கார் பிறப்பித்திருக்கும் 144 தடை உத்தரவை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்வது என சிரோமணி அகாலி தளத்தினர் முடிவு செய்திருக்கின்றனர். அமிர்தசரஸ் மாஜிஸ்திரேட் பிறப்பித்திருக்கும் இந்தத் தடை உத்தரவு இரண்டு மாதங்களுக்கு அமுலில் இருக்குமென்று தெரிகிறது. இந்த சத்தியாக்கிரகத்தை நடத்த மாஸ்டர் தாராசிங் 'சர்வாதிகாரி'யாக நியமிக்கப்பட்டார்.

# பத்ம விபூஷன் 'பட்டதாரி' கைது!

## பொதுக் குழு முடிவுகள்

### தி. மு. கழகப் பொதுச்செயலாளராக தோழர் இரா. நெடுஞ்செழியன்

"புதிய பொதுச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டதினல், கழகம் உயருகிறது என்பதை மாற்றாரும் அறிந்து கொள்வர்," என்று, தோழர் அண்ணதுரை, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை இருக்கைக்கு வரவேற்கையில் கூறியதும், ஆறடிக்கு ஒரு அங்குலமே குறைவாக உள்ள தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இருக்கைக்கு செல்வது கண்டு, பொதுக் குழு உறுப்பினர்கள் மகிழ்ந்து வாழ்த்தினர்.

*'நடமாடும் செந்தமிழ்' என்றும், 'நாவலர்' என்றும் தோழர் அண்ணதுரையால் அன்புடன் அழைக்கப்படும் இரா. நெடுஞ்செழியன், 35 வயது நிரம்பப்பெற்றவர்—கட்டுக் குலையாத உடல்—கலங்கா உள்ளம் படைத்தவர்—அண்ணு வின் பல்கலைக் கழகம் தந்த கருவூலம்!*

நேற்று (24–4–55) காலை 10½ மணியளவில் சென்னை தியாகராயர் கல்லூரியில் கூடிய தி. மு. கழகத்தின் புதிய பொதுக் குழு தி. மு. கழகப் பொதுச் செயலாளராகத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தது.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் முன்மொழிய தோழர்கள் என். வி. நடராசன், மு கருணாநிதி, அம்பில்-தருமலிங்கம், சேலம் ஜி. பி. சோமசுந்தரம், மதுரை எஸ். முத்து, செங்கற்பட்டு கே. டி. எஸ். மணி, இராமநாதபுரம் எம். எஸ். இராமசாமி, சென்னை இளம்பரிதி, தஞ்சை என். எஸ். இளங்கோ, கோவை இராமானுஜம், தென்னுற்காடு சாம்பசிவம், வட ஆற்காடு முல்லை-சத்தி, திருநெல்வேலி எம். எஸ். சிவசாமி, நாஞ்சில் மனோகரன் முதலியோர் வழிமொழிய தோழர் இரா. நெடுஞ்செழியன் ஒருமனதாக பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

கூட்டத் துவக்கத்தில் பொதுச் செயலாளர் அண்ணதுரை அவர்கள், கழகத்தில் வளர்ந்துவரும் ஜனநாயகப் பண்பு குறித்து அரியதோர் உரை நிகழ்த்தினர் (நேற்று வெளிவந்த தனி இதழில் அவரது உரையின் சுருக்கம் தரப்பட்டுள்ளது.)

தோழர்களின் மகிழ்ச்சிப் பெருக்கால் எழுந்த ஆரவாரப் பேரொலிக்கிடையே தோழர் நெடுஞ்செழியன் தனக்குத் தரப்பட்டுள்ள பொதுச் செயலாளர் பொறுப்பினை திறம்பட நிறைவேற்ற எல்லோரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பின்னர் மாநில மாநாட்டிற்கான நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது.

அடுத்து வரவேற்புக் குழு அமைப்பதுபற்றி பலத்த விவாதத்திற்குப் பின் முடிவெடுக்கப் பட்டதும், மாநில மாநாட்டிற்கான துவக்கச் செலவுகளுக்காக மாவட்டக் கழகங்கள் எல்லாம் குறைந்தது ரூ 2,000 தருவதாக எல்லா மாவட்டச் செயலாளர்களும் பல மாவட்டங்களின் சார்பில், உறுதி மொழியளித்தனர்.

பின், பொதுச் செயலாளராயிருந்து பணியாற்றிய தோழர் அண்ணதுரை அவர்கட்கு பாராட்டும் நன்றியும் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை புதிய பொதுச் செயலாளர் தோழர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் கொண்டு வந்தார்; பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவரும், தீர்மானத்தை ஆமோதிக்கும் வகையில், மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலி எழுப்பினர்.

பின்னர், கூட்டத்திற்கு வந்திருந்த எல்லா பொதுக் குழு உறுப்பினர்களுக்கும் பொதுச் செயலாளர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

வந்திருந்த எல்லா பொதுக் குழு உறுப்பினர்களையும் நல்லமுறையில் வரவேற்று உபசரித்து, அறுசுவை உணவும், இதர வசதிகளும் செய்து கொடுத்து பலரின் பாராட்டுதல்களையும் பெற்ற சென்னை மாவட்ட கழக தோழர்களின் பணி குறித்து தாம் பெருமிதமடைவதாகவும், பொதுக் குழுக் கூட்டம் சிறப்புடன் நடைபெற உதவிய அவர்களுக்கு பொதுச் செயலாளர் என்ற முறையில் நன்றி தெரிவித்துக்கொள்வதாயும், தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் கூறினர்.

கூட்ட நிகழ்ச்சிகள் அத்துடன் பகல் 1½ மணியளவில் முடிவுற்றன.

மாலை, கல்லூரி திறந்த வெளி அரங்கில், எம். ஜி. ஆர். நாடக மன்றத்தினரின் 'ஆசை நினைவு' எனும் சீரிய நாடகம் நடைபெற்றது.

## மாவட்டச் செயலாளர்கள் உறுதிமொழி

பல மாவட்டச் செயலாளர்களும், மாநில மாநாட்டு நிதிக்கென குறைந்த பட்சம் ரூ. 2000 வசூல் செய்து தருவதாக உறுதிமொழி தந்தனர்.

## பக்ரா-நங்கல் முன்னாள் எஞ்சினியர் சர்க்கார் பணத்தைக் கையாடியதாக குற்றச்சாட்டு!

### பண்டித நேரு புகழ்ந்த திட்டம் சதிக் கூட்டத்தின் இருப்பிடம்?

உயர்தர அதிகாரிகள் உட்பட 30 பேர் கைது

அம்பாலா, ஏப். 24—

பக்ரா—நங்கல் கால்வாய்த் திட்டத்தின் முன்னாள் தலைமை எஞ்சினீயரும் இந்திய சர்க்காரினல் மிகவும் திறமைசாலி என்று பாராட்டப்பட்டு, அதன் காரணமாக 'பத்ம விபூஷன் திஸ்ரா வர்க்' என்னும் பட்டம் வழங்கப்பட்டவருமான கே. ஆர். சர்மா, பஞ்சாப் இரகசியப் போலீசாரால், இலஞ்சம் வாங்கியது, சர்க்கார் பணத்தைக் கையாடியது, சர்க்காரை ஏமாற்றியது—ஆகிய குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

சர்மாவுக்கு பக்ரா—நங்கல் கால்வாய் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்தமைக்காக இந்திய சர்க்கார் 'பத்ம விபூஷன்' பட்டம் அளிப்பதென அறிவித்தது: ஆனால், இவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் விசாரிக்கப்படும் வரையில் பட்டம் வழங்குவதை நிறுத்தியிருக்கிறது.

ஜலந்தரில் உள்ள தனது மாளிகையில் சர்மா கைது செய்யப்பட்டு மாவட்ட மாஜிஸ்திரேட்டின் முன்னர் கொண்டு செல்லப்பட்டார். நாளை அவர் அம்பாலா நீதி மன்றத்தில் நிறுத்தப்படுவார்.

இந்திய சர்க்காரினல் உயர்ந்ததென்று கருதப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டதும், பண்டித நேருவினல் 'உலகிலேயே ஒரு அற்புதம்' என்று பாராட்டப்பட்டதுமான பக்ரா—நங்கல் திட்டம், 'ஊழல் மலிந்த திட்டம்' என்பதை அடிக்கடி எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், இதுவரை இரண்டு எக்சிகியூடிவ் எஞ்சினியர்கள், நான்கு சப்-டிவிஷனல் அதிகாரிகள், பதினெட்டு ஓவர்சியர்கள் உள்பட சுமார் 30 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்; இவர்களெல்லோரும், பக்ரா-நங்கல் திட்டம் அமுல் செய்யப்பட்டபோது, சர்க்காரை ஏமாற்றி சதி செய்தார்களென குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றனர்.

இப்போது இத்திட்டத்தை நடத்திய தலைமை அதிகாரியான கே. ஆர். சர்மா கைது செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். நார்வாஞவில் இவர் தலைமை எஞ்சினியராகப் பணியாற்றியபோது, ஒரு லட்சம் அடி அளவுள்ள 'உலோகக் குழாய்'களை சுமார் ரூ 2½ லட்சத்திற்கு வேண்டுமென்றே வாங்கி, அதன் மூலம் பண இலாபம் அடைந்ததாகவும், அரை லட்சம் ரூபாய்க்கு மார்க்கெட் விலைக்கு மேல் அதிக விலை கொடுத்து 'குழாய்'கள் வாங்கி, அதன் மூலம் சுய இலாபம் அடைந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

கே. ஆர். சர்மா, இந்த முறைகளினல், பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் சர்க்கார் பணத்தை கையாடியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறார்.

## பாராளுமன்றம் 'தலைமைப் பீடம்' அல்லவாம்!

### டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் கருத்து

"நான் எழுத்தாளர்களுள் ஒருவனுயிருந்தேன் என்பதில் பெருமைப்படைகிறேன்; அந்த நாட்களில் எழுத்தாளர் வேலைக்கு மிகவும் குறைந்த ஊதியமே கிடைத்து வந்தது; இருந்தாலும், பலர் எழுத்தாளர் வேலையை விரும்பியதற்குக் காரணம், இலட்சியத்திற்காக, தியாகம் புரியும் பணியாக அந்த வேலை இருந்ததுதான்; அப்போதெல்லாம், 'இவ்வளவு மணி நேர வேலை,' என்ற கணக்கு இருக்கவில்லை; எல்லோரும், எவ்வளவு கடினமாக—திறமையுடன் முடியுமோ அவ்வளவு வேலை செய்தனர்; அந்தப் பழைய பரம்பரை, எவ்வன துன்பங்கள நேர்ந்தாலும், தென்னிந்தியாவில் மட்டுமாகிலும் தொடர்ந்து வளர வேண்டும்.

"எழுத்துலகைப் பொறுத்த வரையில் என்னை வருத்தும் ஒன்று, சுதந்திரம் கிடைத்த பின்பும்கூட, பத்திரிகைச் சட்டங்கள் இருப்பதுதான்; பிரிட்டிஷ் ஆட்சியின்போது எல்லா பத்திரிகை ஆசிரியர்களும் இந்தச் சட்டங்களைக் கண்டித்தனர்; ஆனல் ஒரு ஜனநாயகக் குடியரசாட்சியிலும்கூட இச்சட்டங்கள் நிலவுவது, மிகவும் வருந்தத் தக்கதாகும்;

"சிலர், நம் சொந்தத் தலைவர்களையும் அரசாங்கத்தையும், விமர்சிப்பது—கண்டிப்பது தவறு என எண்ணுகின்றனர்; அது ஒரு தவருன கருத்தாகும்; மக்களின் நலன்களுக்காகப் பாடுபடவேண்டிய கடமை, பத்திரிகைகளுக்கு உண்டு; அவைகள், விருப்பு - வெறுப்பின்றி அச்சமின்றி, நாட்டின் தலைவர்கள் எவ்வளவு பெரியவர்களாயினும், தவருகச் செல்கையில் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கின்றன; கண்டிக்காவிட்டால், ஆசிரியர்கள், தங்களின் கண்ணியமான தொழிலுக்கு உண்மையுடன் நடந்து கொண்டவர்களாகமாட்டார்கள்,"

—என்று, டாக்டர் ஏ இராமசாமி முதலியார், தென்னிந்திய எழுத்தாளர் கழக 17-வது வருடாந்திர மாநாட்டில் பேசகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர் குறிப்பிட்டதாவது:—

"தனிப்பட்டவர்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பறிக்கிற அளவு பாராளுமன்றத்திற்குத் தலைமை அதிகாரம் கிடையாது.

"பாராளுமன்ற அதிகாரத்தைக் கொண்டு தனிப்பட்டோரின் அடிப்படை உரிமைகளையே மாற்றலாம் என்பதானல், நமது அரசியல் சட்டத்தைத் தவருகப் புரிந்து கொண்டதாகத்தானிருக்க முடியும்;

"அரசியல் சட்டம் திருத்தப் படக்கூடியது என்பது உண்மைதான்; ஆனல், அடிப்படை உரிமைகளைப் பொறுத்தவரையில், பாராளுமன்றம் இப்போது தலைமை அதிகாரம் பூண்டதல்ல — அவற்றை மாற்றுவதற்கு," என்றார்.

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட 2,600 சரக்கு வாகனங்கள் 1955 ஜனவரியில் இந்திய ரயில் வேக்களுக்கு சப்ளை செய்யப்பட்டன.

## பிரிட்டனுக்கு கூர்க்க சிப்பாய்கள்

### நேபாளத்தில் புதிய நிலையம்

கிழக்கு நேபாளத்தில் உள்ள தரன் என்னும் இடத்தில், பிரிட்டன், தனது படைகளுக்கு கூர்க்கர்களைத் திரட்ட அலுவலகம் ஒன்றை துவங்க இருக்கிறது.

இந்த அலுவலகம் டார்ஜிலிங்கில் உள்ள படை திரட்டும் அலுவலகத்தைப் போன்றதாகும். புதிய இடத்தில் பிரிட்டிஷ் இராணுவத்திற்கென கூர்க்கர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படுமாம்

பயிற்சிக்குப் பின்னர், இக்கூர்க்கர்கள், மலேயாவுக்கு அனுப்பப்படுவார்களாம்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 25—4—'55 திங்கள்

# விமோசனம் ஏற்படுமா?

"வாழ்வையும், வளத்தையும் கொள்ளை கொள்ளும் வெள்ளை ஏகாதிபத்தியம் அன்னையின் கைகளில் பூட்டியிருக்கும் அடிமை விலங்கு அறுந்துவிட்டால்—நாம் பெறப் போரிடும் சுதந்திரம் கிடைத்துவிட்டால், நாட்டில் வறுமை அகலும்—மக்கள் வாழ்வு மலரும் - தெருவெல்லாம் தேனும் பாலும் ஓடும்—தெவிட்டாத இன்பத்தில் மக்கள் மூழ்கித் திளைப்பர்," என்று அன்று பேசினர் காங்கிரஸ் காரர்கள்!

ஆங்கிலேயன் பிடி அகன்ருயிற்று; 'ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்,' என்று பள்ளுபாடி, 'விடுதலை' விழா கொண்டாடியாயிற்று; என்ருலும், மக்களின் வளைந்த வாழ்வு நிமிர்ந்துவிடவில்லை; கோணல்கள் என்றும்போல் அப்படியே தான் இருக்கின்றன.

'சுதந்திரம் பெற்று ஏழரை ஆண்டுக் காலமாகியும் மக்களுக்கு புது வாழ்வு தர முடியாதவர்களாக எப்படி காங்கிரஸ் காரர்கள் இருக்கின்றனர்,' என்பதை அல்ல, நாம் இங்கு விவரிக்கப் போவது; ஆனல், அன்று அவர்கள், மக்களுக்கு விடுதலை ஆர்வம் ஊட்டுவதற்காகக் காட்டிய ஆசை வார்த்தைகள், எவ்வாறு நிறைவேற்றப்படாமலிருக்கின்றன என்பதை ஒரு சிறு உதாரணம் கொண்டு எடுத்துக் காட்டுவதற்குத்தான் விரும்புகிருேம்.

"தெருவெல்லாம் தேனும், பாலாறும் பெருக்கெடுத்து ஓடும் என்ருர்களே! ஆனல், ஒரு காலத்தில், வயல்களை வளமாக்கி வாழ்வு தந்து கொண்டிருந்த பாலாறு, இன்று மணலாருகக் காட்சி தருகிறதே! இந்த மணலாற்றில் மீண்டும் தண்ணீர் வந்தால், வாழ்விழந்து தவிக்கும் எங்கட்கு வாழ்வு கிடைக்கும்; விவசாயம் பெருகும்; மீண்டும் வயல்களில் பசுமை நிறம் காணலாம்," என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கும் வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்ட மக்கள், 'தெருவெல்லாம் பாலாறு ஓடச்செய்வதாகக் கூறிய காங்கிரசார், பாலாற்றில் தண்ணீர் மட்டுமாவது ஓடச்செய்யக் கூடாதா?' என்று கேட்டு வருகின்றனர்.

மைசூர்—சென்னை மாநிலங்களுக்கிடையில் பாலாற்று நீரைப் பகிர்ந்துகொள்வதில் தகராறு; அந்தத் தகராறு எப்போதிருந்து, எந்த வகையில் உருவாகி நீடித்து வருகிறது என்பதை, இந்த இதழில் வெளியாகியுள்ள இதுபற்றிய செய்தி கூறும். அந்தத் தகராறு தீர்ந்தால்தான்—மைசூர் மாநிலம் பாலாற்றில் வரும் தண்ணீரை தன் எல்லைக்குள்ளேயே தடுத்து நிறுத்திக்கொள்ளாமல் இருந்தால்தான்—சென்னை மாநிலத்தில் வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களை ஊடுருவிச் செல்லும் பாலாற்றில் தண்ணீர் ஓடி வரும்; கரை ஓரத்தில் இருமருங்கிலும் உள்ள வயல்கள் நீர் வளம் பெற்று பலன் தரும்.

சென்னை கூறுகிற யோசனையை மைசூர் அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாயில்லை; இதனல் இப்போது, இப்பிரச்சினை மத்திய அரசாங்கத்திற்குச் சென்றிருக்கிறது — தலையிட்டு நியாயம் வழங்கப்படுவதற்காக!

எத்தனையோ கோடானு கோடி ரூபாய் செலவில், வட நாட்டில் உள்ள பெரும் நதிகளும், சிற்ருறுகளும் அணைக்கட்டுகள் கட்டப்பட்டு, மக்களுக்குப் பயன் தருவனவாக மாற்றப்பட்டு வருகின்றன.

சென்னையில் ஓடும் பாலாற்றில் நீர் வரச் செய்யும் முயற்சியை, சிக்கல்களைத் தவிர்த்து, தானகவே மேற்கொண்டிருக்க வேண்டும்—இந்தியப் பேரரசு! ஆனல், செய்யவில்லை, இன்று வரை! இங்குள்ள மாநில சர்க்காருக்கும், தேர்தல் காலத்தில் மட்டுமே பாலாறு, அவர்கள் கண்களுக்குத் தென்படுவதாயிருக்கிறது.

'எப்போதும்போல், பாலாறு, மணலாருகவே இருக்கும்; என்றைக்கு இதில் நீர் வந்து நம் வயல்கள் செழிக்கப் போகின்றன,' என்று எண்ணிக் கிடந்த மக்களின் உள்ளத்தில், சமீப காலந் தொட்டு, 'பாலாற்றில் தண்ணீர் வர வேண்டும்,' என்ற ஆசையை, சென்னை அரசியலாரின் போக்கு தீவிரமாக வளர்த்துவிட்டிருக்கிறது.

அந்தப் பகுதி வாக்காளர்களைச் சந்திக்கிற தேர்தல் அபேட்சகர்களும் அவ்வப்போது இந்த ஆசை நெருப்பை கொழுந்துவிட்டெரியச் செய்யத் தவறியதில்லை.

இந்த நிலையில், இப்போது, மத்திய அரசாங்கத்தை மத்தியஸ்தம் செய்து வைக்குமாறு கோரப்பட்டிருக்கிறது.—சென்னையில் சட்ட சபையிலும், வெளியிலும், பாலாறு பற்றி காரசாரமாகப் பேசப்பட்ட பின்!

சம்மந்தப்பட்ட மத்திய அரசாங்க மந்திரியை, செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து மக்கள் சபைக்குச் சென்றிருக்கும் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சந்தித்து, நிலைமையைத் தெளிவாக விளக்கியிருக்கிருர். இதற்கு முன்பொரு முறை கூட அவர் இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கிருர். இதற்காக செங்கற்பட்டு மாவட்ட மக்கள் அவரைப் பாராட்டுவார்கள்.

இப்போது செய்யப்படும் முயற்சிதான் 'பாலாற்றில் மீண்டும் தண்ணீர் வருமா,'— என்பதை முடிவு செய்யும் இறுதி முயற்சியாக இருக்கும்.

இந்த இறுதி முயற்சியிலாவது, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்ட மக்களின் ஆசை நிறைவேற—அவர்கள் வயல் செழித்து வாழ்வு வளமுற 'விமோசனம் ஏற்படுமா?' என்று கேட்போருக்கு, 'ஏற்படும் என்று நம்புவோம்,' என்று தான் கூறவேண்டியுள்ளது.

## 'மன்ன'ரின் அதிகார வரம்பு?

### மரண தண்டனையில் சட்ட சம்பந்தமான சிக்கல்

திருச்சூர், ஏப். 23—

கொலைக் குறறம் ஒன்றில், வாரித் என்பவருக்கு நகர செஷன்ஸ் நீதிபதி மரண தண்டனை அளித்தது சட்ட சம்மந்தமான சிக்கலைக் கிளப்பியிருப்பதாக சட்ட நிபுணர்கள் கூறியிருக்கின்றனர்.

தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து தலைமை உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்ய அனுமதி கிடைக்காமற் போகவே, அவர் ஜனதிபதிக்கும், திரு—கொச்சி ராஜப் பிரமுகருக்கும் கருணை மனு ஒன்றினை அனுப்பினர். அந்த இரு மனுக்களும் நிராகரிக்கப்பட்டு விடவே அவர் கொச்சி ராஜப் பிரமுகருக்கும் கருணை மனு ஒன்று அனுப்பிவிட்டாராம்.

இதற்கிடையில், செஷன்ஸ் நீதிபதி மரணதண்டனை நிறைவேற்றப்படுவதை நிறுத்திவைத்தாராம்.

பின் மாநில சர்க்கார் மத்திய சர்க்காரைக் கலந்தாலோசித்த போது, கொச்சி ராஜப் பிரமுகருக்கு கருணை மனு மீது உத்திரவு பிறப்பிக்கும் அதிகாரமில்லை என்று கூறியதின்பேரில், மரண தண்டனையை நிறைவேற்றுமாறு உத்திரவிட்டனராம்

செஷன்ஸ் நீதிபதி தண்டனையை நிறுத்திவைக்குமாறு உத்திரவிட்டிருக்கும்போது எதிரி தூக்கிலிடப்படலாமா என்பது பற்றி சட்ட சம்பந்தமான சிக்கல் எழும்பியுள்ளதுடன், நீதி சம்பந்தப்பட்ட விஷயத்தில் கொச்சி ராஜப்பிரமுகர் எவ்வளவு தூரம் தமது நிர்வாக அதிகாரத்தை பயன்படுத்த முடியும் என்ற விஷயம் வேறு கிளம்பியுள்ளதாம்.

கோடை விடுமுறைக்குப் பின்னர் நீதிமன்றங்கள் திறந்தால்தான் சிக்கல் தீர முடியும் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில் தலைமை உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்ய அனுமதிக்குமாறு சிறையதிகாரிகள் மூலம் எதிரி கோரியிருக்கிருராம்.

## இந்தியா—சீனு வர்த்தகம்

"இந்தியாவிலிருந்து 1954-ல் சீனுவுக்கு ஏற்றுமதியான சரக்குகளின் பெறுமானம் ரூ. 1,77,12,000; அதே ஆண்டில் சீனுவிலிருந்து இங்கு இறக்குமதியான சரக்குகளின் பெறுமானம் ரூ. 94,41,000," என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

# பாலாறு நீர் தகராறு

## மத்திய மந்திரியிடம் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி முறையீடு

"மைசூர் மாநிலத்திற்குள்ளாகவே, பாலாறு நீரை தடுத்து விடுவதால், சென்னை மாநிலத்தில் உள்ள வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் சுமார் 80,000 ஏகர் நிலம் நீர்ப்பாசன வசதியற்று கடந்த மூன்று தலைமுறைகளாக வரண்டு கிடக்கிறது; இதனல், எண்ணற்ற விவசாயிகள் வேலையிழந்து வேறிடம் சென்று பிழைக்க வேண்டியவர்களா யிருக்கின்றனர்; அண்மையில், இந்த நிலை குறித்து சென்னை சட்டசபை விவாதித்திருக்கிறது; இரண்டாண்டுகளுக்கு முன்னல் நானும் இதுபற்றி மத்திய சர்க்காரிடம் முறையீடு செய்திருக்கிறேன்;

"மைசூரும், சென்னையும் அடுத்தடுத்திருக்கும் மாநிலங்கள்; எப்போதும் சோதர உறவு கொண்டவை; ஆனல், பாலாறு நீரைப் பகிர்ந்துகொள்ளும் பிரச்சினையில், சென்னையின் கருத்தை மைசூர் ஏற்றுக்கொள்ள மறுத்து வருகிறது; நான் இந்தப் பிரச்சினையில், சரியானவற்றையோ, தவருனவற்றையோ பற்றிக் குறிப்பிட விரும்பவில்லை; ஆனல், சட்டப்படி, சென்னைக்கு நியாயம் கிடைக்க உறுதியான வாய்ப்பு இருக்கிறது; ஆனல், சுமூகமான முடிவெடுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டு வந்திருக்கின்றன; பிரச்சினையையும், அது சம்மந்தப்பட்ட சட்ட ரீதியான சிக்கல்களையும், ஒரு நிபுணரைக் கொண்டு பரிசீலித்து நியாயம் வழங்குவது நல்லதாயிருக்கும்.

"கிருஷ்ணு - பெண்ணுறு திட்டம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இடம் பெற்றிருக்குமானல், இன்று இந்தப் பிரச்சினை இவ்வளவு நெருக்கடியான நிலைக்கு உருவாகி இருக்காது; எஞ்சினியர்களை அனுப்பி, திட்டம் தயாரித்து, இரு மாநிலங்களின் கருத்தையும் அறியலாம்; ஒரு உடன்பாடு ஏற்படாதுபோனுல், மத்திய அரசாங்கம் தலையிட்டு, நீதியை நிலைநாட்டலாம்,"

—என்று, தென்னுட்டு மக்கள் சபை உறுப்பினர் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, மத்திய மந்திரி குல்ஜாரிலால் நந்தா அவர்களிடம், பாலாறு நீரைப் பகிர்ந்து கொள்வது பற்றி மத்திய அரசாங்கம் தலையிட்டு நியாயம் வழங்க வேண்டுமென்றும், அதுபற்றி விசாரித்தறிய அரசியல் சட்டம் 263-ம் பிரிவின்படி ஒரு குழு நியமிக்க வேண்டும் என்றும், சென்னை அரசாங்கம் கோரியுள்ளது பற்றி விவரித்துரைக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்.

வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்ட விவசாயிகளின் மாநாட்டின் பிரதிநிதியாக உள்ள ஏ எஸ். அய்யங்காரும், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமியுடன் சென்று மத்திய மந்திரியை சந்தித்திருக்கிருர்.

பாலாறு நீர் தகராறு, 1892-க்கு முன்பிருந்தே மைசூர் — சென்னை மாநிலங்களிடை இருந்து வருகிறது; ஆனல் அப்போது ஒரு உடன்பாடு ஏற்பட்டது; என்ருலும், 35 ஆண்டுகளுக்குப் பிறகு, 1927ம் ஆண்டில், தன் பகுதியில், பாலாற்றில் ஒரு துளி தண்ணீரும் வருவதில்லை என்பதை சென்னை மாநிலம் உணர்ந்தது; அதனல், 'ஒப்பந்தம் சரிவர அமுல் செய்யப்படவில்லை,' என்று குறைபட்டுக் கொண்டது.

அதிலிருந்து ஒப்பந்தத்தின் விபரங்களைத் திருத்தியமைத்துக் கொள்ள மறுப்பதாயும், தனக்கு உரிய பங்கினைக்காட்டிலும் மைசூர் அதிகமான பங்கு தண்ணீரை உறிஞ்சிக் கொள்வதாயும் சென்னை சர்க்கார், மைசூர் சர்க்கார் மீது குற்றஞ்சுமத்தி வருகிறது.

## புதியதொழிற்சாலைகள்

### மொத்த மூலதனம் ரூ. 105 கோடி

"தொழில்கள் (அபிவிருத்தி, ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் கீழ், 1954 ஜனவரியிலிருந்து லைசென்சுகள் வழங்கப்பட்ட புதுத்தொழில்களில் முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ள மொத்தத் தொகையான ரூ. 105 கோடியில் அந்நிய முதலீடு ரூ. 28 கோடியாகும். இதில், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 23 கோடியாகும்," என்று டில்லி சபையில் அறிவிக்கப்பட்டது.

1953 - 54ம் ஆண்டில், இந்தியத் துறைமுகங்களில் பிரவேசித்த கப்பல்களின் மொத்த நிறை சுமார் இரண்டு கோடி (பதிவு செய்யப்பட்ட நிகர) டன்னுகும்.

# 'சட்டசபை உறுப்பினராகக் கல்வித் தகுதிக்கு அவசியமே இல்லை'

## முன்னுள் அச்சுத் தொழிலாளியின் கருத்து

## 'பூமி உருண்டையல்ல-தட்டைதான்'

### முதலமைச்சரிடம் மெய்ப்பிப்பதாக ஒரு மதவாதியின் கோரிக்கை

ஐதராபாத், ஏப். 23—

'தன்னை ஒரு சட்டசபை உறுப்பினராக நியமித்து, மந்திரியாக்க வேண்டும்,' என்று கோரி மனு ஒன்றை பி. என். ரெட்டி என்ற முன்னுள் அச்சுத் தொழிலாளி ஒருவர், மாநில முதன் மந்திரி இராமகிருஷ்ண ராவிடம் மனு ஒன்றினைத் தந்திருக்கிருர். இப்போதுள்ள மந்திரிகளையோ, சட்டசபை உறுப்பினர்களையோவிட தான் திறம்பட வேலை செய்ய முடியுமென்பதாகக் கூறி, தனது கோரிக்கையை வலியுறுத்தினுராம், அந்தத் தொழிலாளி.

"அப்படி திறம்பட வேலை செய்வதற்கு தனித் திறமை, தகுதி என்ன இருக்கிறது?" என்று கேட்டபோது, அந்த தொழிலாளி, "எனக்குத் தெரிந்தவரையில் சட்டசபை உறுப்பினர் பதவிக்கு எந்த ஒரு தகுதியும் இருக்க வேண்டுமென எனக்குத் தோன்றவில்லை," என்று கூறியிருக்கிருர்.

காணுமாறு கூறி அனுப்பினுராம்

அதே நேரத்தில் மற்ருெருவர், 'முதன் மந்திரியைப் பார்க்கவேண்டும்,' என்று காத்திருந்தாராம்.

ஒரு முஸ்லீம் மதவாதியான அவர், பொதுவாக நம்பப்படுகிற முதன் மந்திரி, அவரை, மாநில காங்கிரஸ் தலைவரான ஜே வி. நரசிங்க ராவ் என்பவரைப் பேட்டி

படி பூமி உருண்டையாயில்லை என்றும், தட்டையாகத்தான் இருப்பதாகவும், இதை முதன் மந்திரிக்கு தாம் நிரூபித்துக் காட்ட விரும்புவதாகவும் கூறினுர் எனத் தெரிகிறது.

## பாங்கி ஊழியர்கள் எச்சரிக்கை!

பம்பாய், ஏப். 22—

"பாங்கி ஊழியர்களுக்கு இப்போது அளிக்கப்பட்டு வரும் சம்பள உயர்வு நிறுத்தப்படுமானல், நாடு முழுவதிலும் உள்ள பாங்கி ஊழியர்கள் நேரடி நடவடிக்கை எடுக்க நேரிடும்," என்று, பாங்கு ஊழியர்கள் கழகத் தலைவர் பிண்டோ கூறியுள்ளார்.

ஆண்டு தோறும் அளிக்கப்படும் சம்பள உயர்வு நிறுத்தப்படுமென்ருல் பாங்கி ஊழியர்கள் பாங்கித் தீர்ப்பு குழுவினருடன் ஒத்துழைப்பதா இல்லையா என்பது பற்றியும், பாங்கி தீர்ப்புக் குழுவினரை மே திங்களில் சந்திப்பதா இல்லையா என்பதையும் பற்றித் தீர்மானிக்க இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கழகச் செய்திகள்

### ஆவணத்தான்கோட்டை தி. மு. கழக அமைப்பு

4—4—55ல், தோழர் இராமசாமி இல்லத்தில், தோழர் கார்த்திகேயன் தலைமையில் தி. மு. கழகம் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: சி. த. மேகராசன்; துணைச் செயலாளர்: ந. இராசகோபாலன்; பொருளாளர்: இரா. சச்சிதானந்தன்; மாவட்டப் பிரதிநிதி: இரா. கார்த்திகேயன். 6—4—55 மாலை தோழர் இராமசாமி தலைமையில் நடைபெற்ற கழகஅமைப்பு விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ஆர். அசோகன், அடைக்கலம், சிவகுருநாதன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

### தனுஷ்கோடியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

11-4-55ல், தோழர் இ. மாசிலாமணி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் மு. வசனப்பித்தன் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்தும், திராவிட நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தியும் பேசினர்.

### தெள்ளூரில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

14—3—55 மாலை, இவ்வூரில், தோழர் மு. சாமிநாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் கோ. சின்னசாமி, ஏழுமலை, மு. தருமராசன், கு. சோலையப்பன், கருத்தோவியன், ஆ. மணிஎழிலன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்ட இறுதியில் தோழர் மு. சாமிநாதன் தந்தையார் முனுசாமி இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

### கழகக் கொடியேற்றம்

14—4—55 மாலை 5 மணியளவில் தஞ்சை மாவட்டம் இராசப்பையன் சாவடி அடுத்த இராயபுரம் கிராமத்தில் தோழர் வ. சுப்பிரமணியன் அவர்களால் கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. அதையொட்டி குழந்தைகளுக்கு தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

### திட்டக்குடியில் தி. மு. க. பொதுக்கூட்டம்

15—4—55 மாலை 6½ மணிக்கு வானொலித் திடலில், தோழர் தொ. பிச்சைமுத்து தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கோவை செழியன், க. அறிவழகன், ஆர். பாலகுருசாமி ஆகியோர் பேசினர்.

### பன்பாக்கத்தில் தி. மு. க. பிரச்சாரக் கூட்டம்

16—4—55-ல் பன்பாக்கம் கிராமத்தில் தோழர் ஆர். எம். சாமிநாதன் தலைமையில் கும்மிடிபூண்டி தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் தோழர்கள் ப. செ. தூயமணி, ஆ. கிருட்டினன், இராதாமணாளன், கலைமணி முதலியோர் கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

### சூளேசுவரன்பட்டியில் தி. மு. க. பொதுக்கூட்டம்

19-4-55 மாலை 6 மணிக்கு தோழர் ப. கா. இராமசாமி தலைமையில் தோழர் க. துரைக்கண்ணன் சொற்பொழிவாற்றினர். பின்னர், இக்கிராம சேம நலக் கமிட்டி பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றும், உடனடியாகப் பொது மக்கள் மூலம் மேற்படி கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### மாதவரம் தி. மு. கழகம்

#### தொழிற்சங்க ஆலோசனைக் கூட்டம்

14—4—55 காலை 10 மணிக்கு மாதவரம் தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் ஏ. கே. சாமி தலைமையில், தொழிற்சங்க ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ம. பொ. வேதாசலம், அ. செயராசு ஆகியோர் தொழிற்சங்கம் அமைக்கப்பட வேண்டியதின் அவசியம் குறித்துச் சொற்பொழிவாற்றினர். பின்னர், சங்கத்திற்கு, 'மாதவரம் தோல் பதனிடும் திராவிடத் தொழிலாளர் சங்கம்' எனப் பெயரிடப்பட்டது.

இறுதியில் சங்க நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. தலைவர்: ஏ. கே. சாமி; செயலாளர்: ம. பொ. வேதாசலம், துணைச் செயலாளர்: ஆர். தன்சிங்; பொருளாளர்: இ சொக்கலிங்கம்; செயற்குழு உறுப்பினர்கள்: எம். இ. பாண்டியன், அ. செயராசு, ம. கோ. கரிகாலன், பி. இ. வீரராகவன், நா. கோ. அரசு, ந. சுந்தரம், ஏ. கோவிந்தராசன்.

சங்க ஆலோசனைக் குழு ஒன்று அமைத்துக் கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

### கடையநல்லூர் தி. மு. க.

15—4—55 இரவு 8 மணியளவில் கடையநல்லூர் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், கழகப் பணிமனையில், தோழர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்ற போது மே தின விழாப் பொதுக் கூட்டம் நடத்துவது என்றும், 24—4—55ல் சிறப்புக் கூட்டம் ஒன்று கூட்டுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

### மேலகற்கண்டார்கோட்டை தி. மு. க. ஆண்டு விழா

16—4—55 மாலை 6–30 - மணிக்கு, பொன்மலை, மேலக்கற்கண்டார்கோட்டை கழக மைதானத்தில், கழக 4, 5–வது ஆண்டு விழா, தோழர் இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர் மு மாணிக்கம் கழக ஆண்டு அறிக்கை வாசித்தார். தோழர்கள் கோவை செழியன், மதிவாணன், சிற்றுளி—சுப்பிரமணியம் ஆகியோர் பேசிய பின், தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்கள் இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்தும், இன்றுள்ள தொழிலாளர்கள் நிலை பற்றியும் பேசினர். பின்னர் தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

### சென்னை—ஆலந்தூர் தி. மு. கழகம்

16—4—55 இரவு 9½ மணிக்கு, கழக இல்லத்தில், தோழர் மு. தங்கவேலு தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 1—5—53 முதல் 30—3—55 வரையிலுமுள்ள கழக வரவு—செலவு கணக்குகள் யாவும் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர், மே தின விழாப் பொதுக் கூட்டம் நடத்துவதெனவும், அதற்குச் செலவாகும் பணத்தைப் பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டி செய்வதென்றும், ஒவ்வொருதிங்கள் இறுதிசனிக்கிழமை தோறும் இரவு 9½ மணிக்கு செயற்குழுக் கூட்டம் நடத்துவதெனவும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### காங்கயத்தில் தி. மு. கழக பொதுக் கூட்டம்

17—4—55 மாலை 6 மணியளவில், தோழர் இராசவேல் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ப. நாராயணன், இராம. அரங்கண்ணல் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### கல்லுக்குழி தி. மு. கழக ஆண்டு விழா

17—4—55ல் தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் தோழர்கள் எஸ். நெடுமாறன், அம்பில்-தர்மலிங்கம், திராவிடமணி, என். எஸ். இளங்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், கழகத் துணைச் செயலாளரால் கழக ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. பின்னர், சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நீடாமங்கலம் தி. மு. க.

17—4—55ல் தோழர் இராமதாஸ் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் மே மாதம் முதல் வாரத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும், கழகத்திற்கென தனிக் கட்டிடம் அமைக்க ஆவன செய்ய தோழர் இராமதாஸ் தலைமையில், தோழர்கள் இராமு, ஜின்னு, ராசு, ராமானுசம் ஆகியோர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டும் முடிவுகள் செய்யப்பட்டன.

### கும்மிடிபூண்டி தி. மு. க.

17—4—55 மாலை 6 மணிக்கு தோழர் ப. செ. தூயமணி தலைமையில் நடைபெற்ற கழக நிர்வாகக் குழுக் கூட்டத்தில், சென்ற ஆண்டு நிர்வாகக் குழுவிடம் கழகப் பொறுப்புகளை ஒப்படைத்தும், மாதம் ஒருமுறை வெளியிடங்களில் கழகப் பிரச்சாரக் கூட்டம் நடத்துவதென்றும், சென்ற ஆண்டு கழக வரவு—செலவுகளைச் சரிபார்க்க, தோழர் இ. எஸ். மணி, சேரலாதன், சாமிநாதன் ஆகியோரடங்கிய குழு ஒன்றை நியமித்தும், கழகத்திற்கு சொந்தமாகக் கட்டிடம் வாங்க நிதி திரட்டுவதற்கென ஒரு சிறப்புக் கூட்டம் நடத்துவதென்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### புளியங்குளத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

17—4—55 கருங்கடல் கிராம தி. மு. கழகச் சார்பில், இவ்வூர் வ. உ. சி. மைதானத்தில் தோழர் ஆர். பி. வெற்றிவேல் தலைமையில் இரவு 8 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் எஸ். சண்முகம், எஸ். பி. பெயின், கே. சோமத்துரை, சி. வ. சேது ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

### வேலூர் (சேலம்) கழகப் பொதுக்கூட்டம்

18-4-55 மாலை 6-30 மணிக்கு, வ. உ. சி. திடலில், தோழர் முத்துசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள், எஸ் முத்து, ஏ. ஆனைமுத்து, எஸ். அப்பாவு வி. ஏ. இராமநாதன், டி. பி. மூர்த்தி, ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### மண்பறையில் தி. மு. கழக பொதுக் கூட்டம்

20—4—55 மாலை 7-மணிக்கு தோழர் சி. பசவலிங்கம் தலைமையில், தோழர் என். வி. நடராசன், சமூக – அரசியல் நிலை பற்றி விரிவுரையாற்றினர். தோழர் டி. ஏ. கமலன் குழுவினரால் கல்லக்குடி அறப்போர் கதா நிகழ்ச்சி நடைபெற்றது.

## எகிப்துக்கு ஒரு செய்தி நிறுவனம்

### அரசாங்கப் பண உதவியும்—தனி நபர் நிர்வாகமும்

முதல் முதலாக பெரியதோர் புதிய செய்தி நிறுவனத்தை எகிப்து துவங்க இருப்பதாக எகிப்து அரசாங்க விளம்பரத்துறை அதிகாரி அறிவித்துள்ளார்.

அரசாங்கப் பண உதவியுடன் தனி நபர்களின் நிர்வாகத்தில் மேற்படி நிறுவனம் செயல் புரியும். உலகத்தின் தலைநகரங்கள் அனைத்திலும் அதன் கிளை அலுவலகமும், மற்ற இடங்கள் அனைத்திலும் நிருபர்களும் எகிப்தியர்களாக நியமிக்கப்படுவர். புகைப்பட பிரிவும் அத்துடன் இணைக்கப்பட இருக்கிறது.

எகிப்திய செய்திகளை வெளியுலகத்திற்குத் தருவதும், வெளியுலகச் செய்திகளை எகிப்து நாட்டிற்குத் தருவதும், புதிய நிறுவனத்தின் பணி எனவும் தெரிய வருகிறது.

## திருச்சி நகர தி. மு. கழகத் தோழர்கட்கு!

★

திருச்சி நகர தி. மு. கழகச் சார்பில் மே தின விழா 1—5—55ல், சிறப்பாக நடைபெறும்.

அன்று காலை 9 மணிக்கு திருச்சி மலைக்கோட்டை தி. மு. கழகத்திலிருந்து தோழர் ஐ. எம். ஷரீப் தலைமையில் மாபெரும் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு நகர் முழுவதும் ஊர்வலம் வரும்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் கிளைக் கழகங்களில் கொடியேற்றி வைப்பார்.

அன்று மாலை 5 மணிக்கு பிரபாத் டாக்கீசிலிருந்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களை திறந்த காரில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படும். ஊர்வலத்தில் சிலம்ப விளையாட்டுகள் நடைபெறும்.

மாலை 6 மணிக்கு டவுன் ஹாலில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

இயக்கத் தோழர்களும், தொழிலாளர்கள் அனைவரும் ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு நகர தி. மு. கழக செயலாளர் தோழர் எம். எஸ். மணி அறிவிக்கிறார்.

★

### தி. மு. கழக சைக்கிள் தொண்டர்களுக்கு

மேதின சைக்கிள் ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் தொண்டர்கள் முன்கூட்டியே 28—4—55-ம் தேதிக்குள் தங்கள் பெயரை நகர தி. மு. கழகத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் தொண்டர்கள் சைக்கிளில் தி. மு. கழகக் கொடியுடன் அன்று காலை 9-மணிக்கெல்லாம் மலைக்கோட்டை தி. மு. கழகத்திற்கு வந்து சேரவேண்டுமென தொண்டர் படைத் தலைவர் தோழர் ஐ. எம். ஷரீப் அறிவிக்கிறார்.

★

### கிளைக் கழகத் தோழர்கட்கு

1—5—55 மேதின விழாவன்று திருச்சி நகரத்தில் உள்ள கிளைக் கழகங்கள் தங்கள் பகுதியில் தோரணங்கள், கட்டி. கழகத்தை அலங்கரித்து, ஒவ்வொரு கழகமும் தங்கள் பகுதியில் 10 கொடிகளுக்குக்குறையாமல் ஏற்றிவைக்க வேண்டுமென நகர செயலாளர் தோழர் எம். எஸ். மணி அறிவிக்கிறார்.

## ஆண்டு இறுதித் தேர்வுகள்

### டிசம்பரில் நடைபெற யோசனை

கோவை, ஏப். 22—

சென்னை மாநிலத்தில் உள்ள கல்லூரிகள், பள்ளிகளில் ஆண்டு இறுதித் தேர்வுகளை டிசம்பர் திங்களில் நடத்துவது நல்லதாக இருக்குமாவென தான் யோசித்துக் கொண்டிருப்பதாக சென்னை அமைச்சர் சுப்பிரமணியம் கூறினார்.

மைசூர் மாநிலத்தில், தேர்வுகள், இதுபோன்றுதான் நடைபெறுகின்றன.

இப்போது ஆண்டு இறுதித் தேர்வுகள் மார்ச்—ஏப்ரல் திங்களில் நடைபெறுகின்றன; இந்தக் காலம் கடுமையான வெப்பம் நிறைந்த காலமாக இருப்பதால், டிசம்பர் திங்களில் தேர்வு நடத்தினால் தேர்வுக்கு நிற்கும் மாணவர்களுக்கு நல்ல பயன் அளிக்கும் என்று அமைச்சர் கருதுவதாகத் தெரிவித்தார்.

கோவை வழக்கறிஞர்கள் கழகத்தில் பேசகையில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கோடை காலத்தில் நீதி மன்ற நடவடிக்கைகளை காலையில் மட்டும் நடத்துவது பற்றியும் யோசிக்கலாம் என்றும் குறிப்பிட்டாராம்.

1954 டிசம்பர் மாதம் வரை 7,60,000 ஏகர் நிலத்திற்கு பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது.

### உள்நாட்டு விமானப் போக்குவரத்து

#### மத்திய பிரதேசத்தில் முதலில் ஆரம்பம்

நாகபுரி, ஏப் 22—

மத்திய பிரதேசத்தில் உள்ள விமான நிலையங்கள் அனைத்தையும் நாகபுரி விமான நிலயத்துடன் தொடர்பு கொள்ளும்படியான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ம. பி.-யில் உள்நாட்டு விமானப் போக்குவரத்து ஏற்படுத்தப்படுமென்று தெரிகிறது. எட்டு அல்லது பத்து பேர் உட்கார்ந்து செல்லும்படியான விமானம் இந்தப் போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் என்று தெரிகிறது.

ஒரு மாநிலத்திற்குள், உள்நாட்டு விமானப் போக்குவரத்து ஏற்படுவது இந்தியாவில் மத்திய பிரதேசத்தில்தான் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விமானப் போக்குவரத்து சீக்கிரமே துவங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1952–53ம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களில், 1954 - செப்டம்பர் 30-ந் தேதி வரை, மொத்தம் 9,100 வீடுகள் கட்டப்பட்டன; 95,287 வீடுகள் பழுது பார்த்துச் சீர்படுத்தப்பட்டன.

## தோழர் சி. பி. சிற்றரசு அவர்களின் நாஞ்சில் மாவட்ட அலுவல்கள்

16—7—55 நாகர்கோயிலுக்கு அருகாமையிலுள்ள தேரூர் என்ற ஊரில் நிறுவியிருக்கும் கவிமணி தேசிகவிநாயகம் அவர்களின் நினைவு மண்டபத்தையும், நூல் நிலையத்தையும் பார்வையிட்டார்.

அன்று மாலை 6 மணிக்கு மேற்படி ஊரில் தோழர் பி. நடராசன் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் சுமார் 2 மணி நேரம், நமது சமுதாய அரசியல் கொள்கைகளைப் பற்றிப் பேசினார்.

17—4—55 காலை 10 மணிக்கு, நாகர்கோயில் வடசேரி தி. மு. க. அலுவலகக் கட்டிடத்தில் நடைபெற்ற தேர்தலை நடத்திவிட்டு, இறுதியில் ஊழியர் கூட்டத்தில் நமது தோழர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்பதைப் பற்றி விளக்கினார்.

அன்று மாலை தோழர்கள் ஜான், சுப்பிரமணியம், இராமசாமி ஆகிய தோழர்களோடு கரும்கல் என்ற ஊரில் மாலை 4 மணியளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு சுமார் 1½ மணி நேரம், 'திராவிட நாடு பிரிவினை ஏன் கேட்கிறோம்,' என்று பேசி, கூட்டத்தில் கேட்கப்பட்ட பல கேள்விகளுக்குப் பதில் அளித்துவிட்டு, கூட்டத்தை முடித்துக்கொண்டு இரவு 8 மணியளவுக்கு தோழர்களோடு மார்த்தாண்டம் என்ற ஊரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு இரவு 12 மணியளவில் நாகர்கோயில் திரும்பினார்.

# ‘உரிமை பறிபோகாத நிலையில் கூடிப் பேசுவோம்!’

## பார்மோசா பிரச்சினை தீர சூ-என்-லாய் புதிய முயற்சியும்—விளக்கமும்

“அமெரிக்காவுக்கும்—சீனவுக்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகள் எதுவும், ‘பார்மோசாவை மீட்க சீனவுக்கு இருக்கும் உரிமை’யை சிறிதளவேனும் பறிப்பதாக இருக்கக் கூடாது,” என்று சூ-என்-லாய் அழுத்தந்திருத்தமாகக் கூறியுள்ளார்.

முன்னர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் சீனப் பிரதமர் சூ-என்-லாய், தான் பார்மோசா பிரச்சினை பற்றி அமெரிக்காவுடன் விவாதிக்கத் தயார் என்றும், ‘சீன மக்கள் அமெரிக்காவுடன் போரை விரும்பவில்லை,’ என்றும் தெரிவித்திருக்கிறார்.

இப்பிரச்சினைக்குப் பரிகாரம் காணவும், தூரக்கிழக்கில் காணப்படும் நெருக்கடியைத் தவிர்க்கவும், அமெரிக்காவுடன் அமைதியான முறையில் விவாதம் நடத்த சீன சர்க்கார் தயார் என்றும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கு முன்னர் அவர், ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டில் பேசுகையில், “எந்த நாட்டின் எல்லைப் பிரதேசத்திலும் ஓரங்குலம் கூட ஆக்கிரமிக்க சீன தயாராக இல்லை,” என்று கூறியுள்ளார்.

“சீன மக்கள், தவருக அடுத்த நாட்டின் மண்ணில் காலடி எடுத்து வைத்தால் சீன சர்க்கார் அவர்களைத் திருப்பி அழைத்துக் கொள்ளும்,” என்றும் கூறினாராம்.

சீனவின் தென் எல்லை நாடுகளான தாய்லாந்து, லாவோஸ், பர்மா ஆகியவைகளின் பிரதிநிதிகளை சீனவுக்கு வருகை தருமாறும், சீனவின் எல்லைப்புறங்களை நேரில் பார்வையிடுமாறும் அழைத்தார்.

அமெரிக்கா, ஜப்பானுடனும், மற்றுமுள்ள எல்லா நாடுகளுடனும் நட்புறவு கொள்ள சீன விரும்புகிறதென்றும், இந்த நட்புறவை ஏற்படுத்த முயலும் எந்த நாட்டின் முயற்சிகளையும் ஏற்றுக் கொள்ள சீன தயாராக இருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

## வரதட்சணைக்கு எதிராக!

### இளைஞர்கள் உறுதி

ரூபார், ஏப். 23—தங்கள் பெற்றோர்கள் வரதட்சணை பெற்றாலோ, கொடுத்தாலோ, தாங்கள், தங்கள் திருமணத்திற்குச் சம்மதிக்கப் போவதில்லை என பதினறு இளம் பெண்களும், 8 இளைஞர்களும் உறுதி மேற்கொண்டிருக்கின்றனராம்.

ஜெயின் நன் மிக்வந் என்ற பெண், துறவி கூட்டமொன்றில் விடுத்த வேண்டுகோளுக் கிணங்கவே இளைஞர்கள் அந்த முடிவுக்கு வந்தனராம்.

‘தங்கள் பெண்களுக்கோ, பையன்களுக்கோ வரதட்சணை வாங்குவதோ கொடுப்பதோ இல்லை,’ என்று வேறு எட்டு பேர்களும் உறுதி செய்து கொண்டனராம்!

## பாகிஸ்தானில் புதிய எஃகுத் தொழிற்சாலை

கராச்சிக்கு வடபுறத்தில் சிந்து நதியின் ஓரத்தில் உள்ள ‘கோட் அடு’ என்னுமிடத்தில், பாகிஸ்தானின், புதிய எஃகுத் தொழிற்சாலை ஒன்று உருவாக இருக்கிறது.

இத்தொழிற்சாலைக்கான இயந்திரங்கள் ஜெர்மனியிலுள்ள குரூப்ஸ் கம்பெனியாரால் விநியோகம் செய்யப்படவிருக்கின்றன.

இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தம் சென்ற வாரம் கையெழுத்தாயிற்று. இந்த ஜெர்மானியக் கம்பெனியார் தொழிற்சாலை அமைக்க ஆலோசனை கூறுவதில் கைதேர்ந்தவர் என்று தெரிகிறது.

இந்தத் தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு 3,00,000 டன் எஃகு தயார் செய்யுமாம்.

## புத்த மதத்தில் புகுந்து விடுவார்?

புத்தரின் 2,500-வது பிறந்த தினமான அடுத்த ஆண்டில், தன்னைப் பின்பற்றும் 2,50,000 பேர்களுடன் டாக்டர் அம்பேத்கார், புத்த மதத்தில் சேர்ந்து விடுவாராம்!

### ‘கைத்தொழில் வாரம்’

#### இந்திய சர்க்கார் நிதி உதவி

பல்வேறு மாநிலங்களில், கைவேலைப்பாடுடைய பொருள்களின் விற்பனையைப் பெருக்குவதற்கு ‘கைத்தொழில் வாரம்’ ஒன்றை நடத்துவதற்காக அகில இந்தியக் கைத்தொழில் போர்டுக்கு இந்திய சர்க்கார் ரூ. 1,24,500 அனுமதித்திருக்கின்றனர்.

## கீழ் நாடுகளின் புதிய சரிதம்!

### ‘ஆமாம் சாமி’கள் ஆகமாட்டோம் என வல்லரசுகளுக்கு எச்சரிக்கை!

பாண்டுங்கில் நடைபெற்று முடிவுற்ற ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு உலகில் புதிய சட்டமாகவும், மேற்கத்திய நாடுகளின் ஆணவப் போக்கிற்கு ஒரு முடிவு வகிக்கும் மாநாடாகவும் அமைந்திருக்கிறது

மாநாட்டின் முடிவு கூட்டத்தில் இந்தியப் பிரதமர் பண்டித நேரு பேசுகையில் கூறினார்:—

“இனிமேல் உலகப் பிரச்சினையையும், ஆசிய-ஆப்பிரிக்க பிரச்சினையையும் ஒன்றாகக் கருதவேண்டியிருக்கிறது; உலகப் போட்டியில் ஆசியாவும்-ஆப்பிரிக்காவும் பின்னணியில் விடப்பட்டுள்ளன; நாம் அதற்கு இப்போதே சரி செய்யாவிட்டால், நாம் மீண்டும் கீழே விழுந்து விடுவோம்; நீண்ட காலத்திற்குத் தலைநிமிர முடியாது; நாம் அதை விரும்பவில்லை,” என்று எச்சரித்திருக்கிறார்.

“ஐரோப்பாவும் அமெரிக்காவும், ‘தங்களுடைய சச்சரவுகள்தான் உலகின் சச்சரவுகள்,’ என்று நினைத்துக் கொண்டிருக்கின்றன; ஆகவே, ‘உலகம் அவர்களுக்கு அடி பணிய வேண்டும்,’ என்று நினைக்கின்றனர்; நாம் ஏன் அவர்களுடைய சச்சரவுகளிலும், போர்களிலும் இழுக்கப்பட வேண்டும்? நாம் என்ன—ஐரோப்பியர், அமெரிக்கர், அல்லது ரஷ்யர்களின் “நகல் பதிப்பு”களா?” என்று கேட்டார்.

“நாம் ‘ஆமாம்சாமி’கள் அல்ல; எதிர்காலத்தில் ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளில் ‘ஆமாம சாமி’கள் எவரும் இருக்கமாட்டார்கள் என்று நம்புகிறோம்; ஏனென்றால், கடந்த காலத்தில் அவர்கள் ஏராளமாக இருந்திருக்கிறார்கள்,’ என்று சுட்டிக் காட்டினர்.

“நாம் இங்கே சரித்திரத்தை உருவாக்கியிருக்கிறோம்; அதை நாம் உலகம் எதிர்பார்ப்பதைப் போல் செயலில் காண்பிப்போம்,” என்று பண்டித நேரு உறுதி கூறினர்.

### ஒரே ரகந்தானும்!

‘சீட்டோ’ நிறுவனமும், ‘கம்யூனிஸ்டு அகிலமும்’ ஒரே ரகத்தைச் சேர்ந்தவைகள்தான் என்றும், ‘இரண்டும் அபாயகரமானவைகளே’ என்றும் பண்டித நேரு, பாண்டுங் மாநாட்டின் அரசியல் குழுவில் பேசுகையில் குறிப்பிட்டாராம்!

### அழுலாகுமா?

“அணு, நீர்வளிக்குண்டுகளை உபயோகிப்பதற்கும், அவற்றின் உற்பத்திக்கும் தடை விதிக்க வேண்டும்; அணுக்குண்டு சோதனைகளையும் நிறுத்த வேண்டும்,”

என்று, ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டின் அரசியல் குழு தீர்மானம் நிறைவேற்றியதாக அறிவிக்கப்படுகிறது.

## செந்நிற மழை!

எதிர்பாராத விதத்தில் நாகபுரி பகுதியில், சில இடங்களில் 23-ந் தேதி மாலை மூன்று நிமிட நேரம் குங்குமச் சிவப்பு நிறத்தில் மழை பெய்ததை ஏராளமான மக்கள் அதிசயத்துடன் கண்டனராம்!

### பெட்ரோல் ஊற்றுகள் கண்டுபிடிக்கத் திட்டம்

#### ஐந்தாண்டுகளில் ரூ. 8½ கோடி இந்திய சர்க்கார் செலவிடும்

இந்தியாவில் பெட்ரோல் இருக்கும் ஊற்றுகளை ஐந்தாண்டுகளில் தேடிக் கண்டுபிடிக்க ரூ. 8½ கோடி செலவிடும் திட்டமொன்றை இந்திய சர்க்கார் மேற்கொண்டுவிட்டனராம்.

ஜெய்சால்மர் பிரதேசத்தில் தான் முக்கியமாக ஆராய்ச்சி நடத்தப்படும்; இமாலயத்தின் அடிவாரம், உ. பிரதேசம், மேல்வங்கம், அசாம், மணிபூர், திரிபுரா, இராஜஸ்தான் மேல் பக்கம், கட்ச், பஞ்சாப், மேற்கு வங்கம், குஜராத், அந்தமான் ஆகிய இடங்களில் பெட்ரோலியம் இருப்பதாகக்கூறப்படுகிறது

### பஸ் போக்கு - வரத்து

#### நகர சபைகளே நடத்தும்?

பஸ் போக்கு-வரத்துக்களை நகர சபைகளே நடத்துவதற்கு அனுமதிக்கும் பிரச்சினை பற்றி, அமைச்சர் குழு விரைவில் கூடி ஆலோசிக்குமென்று அமைச்சர் பரமேசுவரன் கோயமுத்தூரில் தெரிவித்துள்ளார்.

### படிப்பக கட்டிட நிதிக்காக நாடகங்கள்

குன்றத்தூரில் படிப்பக கட்டிட, நிதிக்காக, 2—5—55 இரவு 7 மணிக்கு, எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, சி. ஆர். ராஜகுமாரி, எம். என். கிருஷ்ணன் ஆகியோர் நடிக்கும் ‘மகாராணி’ நாடகமும், 3—5—55 இரவு 10 மணிக்கு, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் ஆகியோர் நடிக்கும் ‘தளபதி’ நாடகமும் நடைபெறும்.

முகவரி:
கி. மனோகரன்,
சண்முக விலாஸ், கோட்டாறு,
நாகர்கோவில்.

## நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்தான் நிர்வாக மொழி!

### நெல்லை மாவட்ட அதிகாரி தரும் விளக்கம்

திருநெல்வேலி, ஏப், 25—“கடந்த 40, 50 ஆண்டுகளுக்கு முன்னர் வரை மாவட்டங்களின் நிர்வாகம் அனைத்தும் தமிழில் மட்டுமே நடத்தப்பட்டன; முன்பு, கலெக்டர் அலுவலக நிர்வாகம்—‘ஆங்கிலப் பிரிவு, தமிழ் மொழிப் பிரிவு’ என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது; இதற்குப் பழைய ‘ரிக்கார்டு’கள் சான்று பகரும்,”

என்று, நெல்லை மாவட்ட கலெக்டர் எஸ். எம். பாலகிருஷ்ண பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

சென்னை சர்க்கார், தமிழில் நிர்வாகத்தை நடத்த உதவி புரியும் நோக்குடன் பணியாற்றும் குழு ஒன்றைத் துவக்கிவைக்கையில அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

“சென்ற 40 ஆண்டுகளுக்கு முன்னர்தான் ஆங்கிலம் மாவட்ட நிர்வாகங்களில் நுழைந்தது; இப்போது நாடு சுதந்திரம் அடைந்து விட்டதால் தமிழ் தான் ஆட்சி மொழியாக இருப்பது இயற்கைக்குப் பொருத்தமானது,”

என்றும், அவர் கருத்தறிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சிக்கு, முன்னள் மாவட்ட நீதிபதியும், நிர்வாகச் சொற்கள் குழுவின் தலைவருமான டி. சோமசுந்தரம் தலைமை தாங்கினர்.

நெல்லை மாவட்ட கலெக்டர் தொடர்ந்து பேசுகையில், நிர்வாகத்திற்கென தமிழ்ச் சொற்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவினர், இதை ஒரு பெரிய தமிழ் இலக்கியமென்று கருதி, மிகவும் தூய்மையான முறையில் செய்யாது புதிய சொற்களைத் தமிழ் நாட்டில் உள்ள பல தரப்பட்ட மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் தயார் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இப்போது அலுவலகத்தில் உள்ளவர்கள் ஆங்கிலத்தில்தான் எழுதக் கற்றுள்ளார்கள் என்றும், அவர்களுக்கு தமிழில் இதே போன்று சுலபமாக எழுதப் பயிற்சி தரப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## தமிழிலேயே பேச அமைச்சர் ஆவல்!

### எதிர் காலத்தில் அவர் நிலைபற்றி சூசகமான தகவல்

“கூடியவரையில், தமிழிலேயே பேசுவதற்கு நான் முடிவு செய்திருக்கிறேன்,”

என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம், கோவை வழக்கறிஞர்களிடையில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழிலேயே அவர் மேலும் பேசுகையில், என்றாவது ஒரு நாள் தானும் ‘வழக்கறிஞர்கள் வரிசை’யில் ஒருவராகிவிடக் கூடுமென்றும், ஒரு அமைச்சர் எப்பொழுதும் ‘முன்னாள் அமைச்சராக’ ஆகத்தான் வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

## கிராமக் கடன் வசதிகளுக்குத் திட்டம்

### சென்னை சர்க்கார் முயற்சி

#### விவசாயப் பண்டங்களுக்கும் விற்பனை வசதி

குறுகிய, நடுத்தர, நீண்டகாலக் கெடு கிராமக் கடன் வசதிகளுக்கும், விவசாயப் பண்டங்கள் விற்பனை வசதிகளுக்கும் ஏற்பாடு செய்ய மாநிலம் முழுவதற்கும் விரிவானதோர் இணைப்புத் திட்டத்தை சென்னை சர்க்கார் தயாரித்து வருகின்றனர். இத்திட்டத்திற்குப் பல கோடி ரூபாய் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பிறந்த நாட்டில் பிழைப்பில்லை!

### போபால் பண்ணைக்குக் குடியேற்றம்!

திரு - கொச்சி மாநிலத்தைச் சேர்ந்த 100 நிலமில்லாத் தொழிலாளர்கள், ஏப்ரல் 23-ந் தேதியன்று கொச்சியிலிருந்து போபாலுக்குப் புறப்பட்டுச் சென்றனர். திரு-கொச்சியிலிருந்து இவ்வாறு அங்கு குடியேறியவர்களில் இவர்கள், இரண்டாவது குழுவினராகும் அங்கு அவர்கள், சுல்தான்பூர் என்னுமிடத்தில் உள்ள மத்திய இயந்திர விவசாயப் பண்ணையில் குடியமர்த்தப்பட்டு, இறுதியில் நிலச் சொந்தக்காரர்கள் ஆவார்கள்.

விவசாயத் தொழிலில் அவர்களுக்குள்ள தகுதியை மதிப்பிட்டறிவதற்காக, அவர்கள் முதலில் அப்பண்ணையில் ஓராண்டுக் காலத்துக்கு சம்பள அடிப்படையில் வேலை செய்வர்; அவர்களில் தகுதியுள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும், பத்து ஏக்கரா நிலம் ஒதுக்கப்படும். அதற்காக, அவர்களிடமிருந்து பெயரளவுக்கு ஏக்கராவுக்கு ரூ 50 வீதம் வசூலிக்கப்படும். அத்தொகைகள் சுலபமான நெடுங் காலத் தவணைகளில் பெறப்படும்.

## பத்திராவதி இரும்புத் தொழிற்சாலை

### ரூ. 12 கோடி செலவில் அபிவிருத்தி

மைசூர் மாநிலத்தில் உள்ள பத்திராவதி இரும்புத் தொழிற்சாலையின் உற்பத்தி அளவை உயர்த்துவது என்று திட்டக் குழு தீர்மானித்திருக்கிறதாம்.

தொழிற்சாலையின் உற்பத்தி அளவு 25,000 டன்னிலிருந்து 1,00,000 டன்னாக உயர்த்தப்படுமாம்.

புதிய திட்டப்படி ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் எஃகுச் சாமான்கள் ஆகியவைகள் உற்பத்தி செய்யப்படுமாம்.

இத்திட்டத்திற்கு ரூ. 12 கோடி செலவாகும் என்று தெரிகிறது.

இச்செய்தியை இந்திய சர்க்கார் தொழில் அமைச்சர் எச் சித்த வீரப்பா தெரிவித்திருக்கிறார்

## ரூபாய் 65,55,000-ல் ஆறடுக்கு மாடி!

ரூ. 65,55,000 செலவில், பம்பாய் சர்க்கார் தலைமைக் காரியாலயத்திற்காக ஆறடுக்கு மாடிக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது; ஆண்டிற்கு ரூ. 2,85,000 வாடகை கொடுத்து, பல கட்டிடங்களில் சிதறிக் கிடந்த சர்க்காரின் பல காரியாலயங்கள், இனிமேல், சர்ச் கேட்டிலுள்ள இம்மாளிகைக்கு மாற்றப்படுமாம்!

இந்தியாவில் உள்ள இரும்பு தாதுச் சுரங்கங்களிலிருந்து 1955-பிப்ரவரி மாதத்தில் மொத்தம் 3,62,330 டன் இரும்பு தாது மண் வெட்டியெடுக்கப்பட்டது; 1955 - ஜனவரியில் வெட்டியெடுக்கப் பட்ட தாது மண்ணின் அளவு 3,58,510 டன்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.